மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் கோவில்பட்டி

அ.வ.எண். 93/2023.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.2.

---

பெயர். – திரு.பால்பாண்டி.

த/பெ. –

கிராமம் –

தொழில் –

தாலுகா –

வயது –

1875–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2024–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ஆம் நாள் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

முதல் விசாரணை.– தாவா வழக்கில் நான் வாதிதரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை எனது தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிரதிதரப்பு குறுக்கு விசாரணை –

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வாரீசு சான்று கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள். யாருக்கு வாரீசு சான்று கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுளள்து என்றால் வாதிகளுக்கு. வாதிகளின் தந்தை முத்துகுமாரசாமி மட்டும் தான் எனது நண்பர் என்றால் சரிதான். முத்துகுமாரசாமியின் பெற்றோரை எனக்குத்தெரியாது என்றால் தெரியாது. முத்துகுமாரசாமியின் பெற்றோருக்கு எத்தனை குழந்தைகள் என்ற விவரம் எனக்குத்தெரியாது என்றால் ஒரே பையன் தான். முத்துகுமாரசாமியின் பெற்றோர் எங்குவைத்து இறந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் கழுகுமலையில் வைத்து இறந்தார்கள். முத்துகுமாரசாமியின் பெற்றோர்கள் இறந்த விவரம் அப்போது இருந்த கிராம நிர்வாக அலுவலருக்கு தான் முழு விவரம் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. முத்துகுமாரசாமியின் இறப்பு பற்றியும், அவரின் பெற்றோரின் இறப்பு பற்றியும் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக

அலுவலருக்குத்தான் சாட்சியம் அளிக்க இயலும் என்றாலும் அது குறித்து நான் சாட்சியம் அளிப்பது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
19.08.2024.